## <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| MCOP.No. 60/2016 | Date : 06.02.2026 | PW1 |
|---|---|---|
| Name: உத்தரசாமி | த/பெ. சின்னசாமி | |

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சம்மந்தமாக காவல்நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் நான் தான் புகார் கொடுத்தேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.13 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.25,997/– தான் எனக்கு மருத்துவ செலவு ஆனது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் தலை கவசம் அணியவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்து 21 நாட்கள் கழித்துதான் நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் வண்டி ஓட்டத்தெரியாமல் நானாகவே விபத்தை ஏற்படுத்தியதால்தான் காலதாமதமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் நஷ்டஈடு கணக்கிடும்போது என்னுடைய அஜாக்ரதையும் கணக்கில் கொள்ளவேண்டும் என்றாலும் நான் கேட்டுள்ள நஷ்டஈடு தொகை அதிகம் என்றாலும் சரியல்ல.

ஒம்/–உத்தரசாமி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.